பொது சன நூலகம்
18 MAR 2000
மாநகராட்சி மன்றம்

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 04 வெள்ளிக்கிழமை ( 17 - 03 - 2000 ) VALAMPURI ஒலி: 89

★ மட்டக்களப்பு- வெலிகந்த வீதியில் ★

# புலிகள் கிளைமோர்த் தாக்குதல்

# ஆறு பொலிஸார் பலி! 10 பேர் காயம்

## புதிய பாணியில் நடத்தப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-வெலிகந்த வீதியில் பிள்ளையாரடிக்கு அண்மையில் இராணுவ வாகனத் தொடரணி மீதான கிளைமோர்த்தாக்குதலில் சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் உட்பட ஆறு பொலிஸார் கொல்லப்பட்டதுடன் 10 பொலிஸார் காயமடைந்தனர்.

இக் கிளைமோர்த் தாக்குதல் வோக்கி டோக்கி மூலம் புதியதொரு பாணியில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது.

மட்டக்களப்பு வெலிகந்த வீதியில் இராணுவ வாகனத் தொடர்அணிமீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் ஆறு பொலிசார் கொல்லப்பட்டதுடன் பத்து பொலிசார் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் கி,ஐ டி.பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுமித்சில்வாவும் அடங்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இல. இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

### தூதுவரிடம் குகேந்திரன் எம்.பி கேள்வி

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவிற்கும் பாரிய பொறுப்புண்டு அதிலிருந்து அந்நாடு ஒருபோதும் விலகிவிட முடியாது.

எனினும் இந்தியாவின் தற்போதைய மௌன நிலையால் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா கொண்டுள்ள நிலைப்பாட்டை அறியமுடியாதுள்ளது.

எனவே இந்நிலையை வெளிப்படுத்த இந்தியா இனி மேலும் தயங்கக்கூடாது.

இவ்வாறு யாழ். மாவட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

### அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக

## அரசு-ஐ.தே. கட்சிகளுக்கிடையில் இணக்கம் ஏற்படாது ஒத்திவைப்பு!

### 21ம் திகதி மீண்டும்சந்திப்பு

(கொழும்பு)

உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்குழுவிற்கும் ஐக்கிய தேசிய கட்சிக் குழுவிற்கும் இடையில் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நேற்று காலை 9மணிமுதல் நண்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது.

அலரிமாளிகையில் நடைபெற்ற இப்பேச்சு வார்த்தையில் அரசுசார்பாக ஜனாதிபதியுடன் அமைச்சர்களான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தர்மசிறி சேனநாயக்க, டி. எம். ஜெயரட்ண, பேராசிரியர் ஜி எல். பீரிஸ், இந்திக குணவர்த்தன, பட்டி வீரக்கோன், எம்.எச்.எம். அஷ்ரப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டை ஜாஎலப் பகுதியில் 200தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

(கொழும்பு).

புறக்கோட்டை, ஜாஎல பகுதிகள்நேற்று சுற்றி வளைக்கப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டது. இத் தேடுதலின் போது புறக்கோட்டைப்பகுதிகளில் 35 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதே வேளை ஜாஎலப் பகுதியும் நேற்றுசுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்திய போது 19 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இத் தேடுதல் வேட்டை நேற்றுக்காலை 9.30மணியில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று குருபூசை தினம்

சிவதொண்டன் நிலையம் நடாத்தும் யோகர்சுவாமிகள் குரு பூசை தின நிகழ்வுகள் இன்று நிலைய புராண மண்டபத்தில் நடைபெறும். காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் விசேட அபிஷேக ஆராதனையைத்தொடர்ந்து நண்பகல் அன்னதானமும் இடம் பெறும்.

## கிளி.-முல்லைத்தீவு அரச அதிபர்கள் பாதுகாப்பு அதிகாரிகளை சந்திப்பர்

(வவுனியா)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் விரைவில் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில்காணப்படும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும்வன்னிப் பிரதேசத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

அரசியலமைப்புச் சீர் திருத்தம் தொடர்பாக ரணில்விக்கிரமசிங்கவிற்கும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் இடம் பெற்று வரும் பேச்சுவார்த்தையைக் கண்டித்தும், பேச்சுவார்த்தைகளை பகிரங்கமாக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கோரியும் ஜே.வி.பி. நேற்றுகொழும்பில்ஆர்ப்பாட்டப்பேரணியொன்றைநடாத்தியது.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலம் லிப்டன் சதுக்கத்தில் ஆரம்பமாகி ஹைபார்க்கை வந்தடைந்தது. அந்த கூட்டம் நடாத்தப்பட்டது.

(8ஆம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரிஇந்துக்கல்லூரிமாணவன்

## நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு பகிஷ்கரிப்பை அடுத்து, மாலை விடுதலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் உயர்தரவகுப்பு மாணவனான செல்வராசா துஸ்யந்தன் (வயது 20)நேற்று படையினரால் கைது செய்யப்பட்டு பின்பு மாணவர்களின் பகிஷ்கரிப்பையடுத்து விடுதலை செய்யப்பட்டார்.

இச் சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது நேற்றுக் காலை 7 மணியளவில் வீட்டில் வைத்து மேற்படி மாணவ

(8ஆம் பக்கம் பார்க்க)

### காணாமல் போன

## யாழ். மாநகரசபை ஊழியருக்கு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

### ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கைது செய்யப்பட்டுக்காணாமல் போனோரில் யாழ். மாநகரசபையில் கடமை புரிந்த ஊழியர்களில் மூன்று பேருக்கான சம்பளக் கொடுப்பனவு இம் மாதத்திலிருந்து வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவு வேளை யன்னலை உடைத்து 25பவுண் நகை28ஆயிரம் ரொக்கம் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கில் உறங்கும் நேரம் வீடுகளில் புகுந்த திருட்டுக் கோஸ்டியினர் ஈஸ்வரலிங்கம் என்பவரது வீட்டில் 25 பவுண் தங்க நகைகளையும் 28500 ரூபா ரொக்கப் பணத்தினையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது வீட்டார் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளை பின்புற யன்னலு

(8 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்.**

## சின்னஞ்சிறு விளம்பரம்

### நாற்றுக்கள் விற்பனைக்கு

நல்ல இன தக்காளி. கத்தரி நாற்றுக்கள்விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. அறவழி செயலகம் 29, கண்டி வீதி கைதடி நுணாவில் சாவகச்சேரி.

[கி-239]


## திடீர்சோதனை

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மருதனார் மடம் சந்தியில் படையினர் மிகத் தீவிரமான திடீர் சோதனை நடவடிக்கைககளை மேற்கொண்டனர்.

ஆண் பெண் இருபாலாருக்கும் அடையாள அட்டை கோரப்பட்டு அவர்கள் வசமிருந்த பொதிகளும் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

(எஸ்)

# அகதிமுகாம் வாழ்க்கையைவிட கிராமிய வாழ்க்கையே சிறந்தது

## வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

(வவுனியா)

அகதி முகாம் வாழ்க்கையை விடகிராமவாழ்க்கை சுதந்திரமானது. உங்களின் நல்வாழ்வுக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. உங்களுக்கான ஏனைய அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் யுத்தத்தினால் குடும்பத்தலைவரை இழந்த 50 விதவைகளுக்கு புதிய வீடுகள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.

புதிய கோவிற்குளத்தில் 35 இலட்சரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட வீட்டுத் தொகுதி கையளிப்பு வைபவம் இடம்பெற்றது.

இதில் வவுனியா பிரதேச செயலர் மேரி காமல்டா சுகுமார் பள்ளமடு பிரதேச சபை விசேட ஆணையாளர்சத்தியசீலன் யூ.என்.எச்.சீ.ஆர்.பிரதிநிதிசெல்வி மாத்தள உட்படப் பலர்கலந்து கொண்டனர்.

(ச)

## விளையாட்டு மைதானம் திருத்தம்

[அச்சுவேலி]

பாவிக்க முடியாத நிலையில் காணப்பட்ட கோப்பாய் மகாவித்தியாலய வியைாட்டு மைதானம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இத்திருத்தும் பணியை கோப்பாய் வானவில் விளையாட்டுக் கழகத்தினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

[க-57]

## வரணி, இயற்றாளை விவசாயிகள் அபிவிருத்தி கடனுதவி பெற்றனர்

(தென்மராட்சி)

யாழ்.மாவட்ட சர்வோதய சிரமதான இயக்கம் தென்மராச்சியிலுள்ள வரணி இயற்றாளையிலுள்ள விவசாய சம்மேளனத்தினூடாக அப்பகுதியைச் சேர்ந்த 40விவசாயிகளுக்கு விவசாய அபிவிருத்தித்திட்டத்துக்கான கடன் உதவியை அண்மையில் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு விவசாயிக்கும் தலா5 ஆயிரம் ரூபாவரை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வோதய இயக்கத்தின் செயல்த்திட்டப்பணிப்பாளர் திரு.ரி·சங்கரப்பிள்ளை திட்டப்பயனாளிகளுக்கான கடனை வழங்கினார்.

(சி-77)

## மலேரியா, டெங்கு காய்ச்சல் ஒழிக்க மாநகர சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

அண்மைக் காலத்தில் காலநிலை மாற்றத்தினால் நுளம்பின் பெருக்கம் அதிகரித்து வருவதாகவும், மலேரியா, டெங்குகாய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம்நிலவுகிறது.

நுளம்பு பரவல் தொடர்பாக யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினர் விடுத்த செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தற்சமயம் நகர்ப்புற சுகாதாரப் பகுதியில் நோய் கட்டுப்பாட்டிலிருந்து வருகின்றது. எமது நோய்த் தடுப்புப் பகுதி இயன்றளவு, இருக்கும் வளங்களைக் கொண்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கிறது.

பொதுமக்கள் - நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களைத் தமது வீட்டுச் சூழலில் அழித்தும் மற்றும் வெற்றுப் பேத்தல்கள் சிரட்டைகள், குப்பைகூழங்களிலும் நீர் தேங்கி நிற்பதைத் தவிர்ப்பதன் மூலம் எமக்கு உதவலாம்.

மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனை எமது கச்சேரியடிக் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலையில் மேற்கொள்ளப்படும், ஆரம்பத்திலேயே நோயை இனம் கண்டு தகுந்த சிகிச்சை அளிப்பதன் மூலம் நோயின் ஆபத்தைத் தவிர்க்கலாம், டெங்குக் காய்சலும் குறிப்பாகப் பாலர் வயதினருக்கு ஆபத்தாக மாறலாம், ஆகையால் நோய் கண்டதும் உடன் தகுந்த வைத்தியரிடம் காண்பித்து சிகிச்சை பெற்றால ஆபத்துக்களைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்ள்ளது.

[க]

## பொன் அணிகளுக்கான துடுப்பாட்டம் இன்றும் நாளையும் நடைபெறுகிறது

(ஈச்சமோட்டை)

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையிலான 83-வது மாபெரும் துடுப்பாட்டம் இன்று வெளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பொன் அணிகளென வர்ணிக்கப்படும் இத் துடுப்பாட்டப் போட்டியில் இதுவரை இவ்விரு அணிகளும் ஆடிய ஆட்டங்களில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி 24 தடவைகளும், யாழ்ப்பாணக் கல்லூரி அணி 15. தடவைகளும் வெற்றியீட்டியுள்ளன. 24 தடவைகள் வெற்றி தோல்வி இன்றி முடிந்தன.

இந்த வருடம் புனித பத்திரிசியார் கல்லூரியின் 150-வது நிறைவினையொட்டி அனைத்துத் துடுப்பாட்டப் போட்டிகளும் கல்லூரி மைதானத்திலேயே இடம்பெற்றுவருகின்றன.

இம்முறை புனித பத்திரிசியார் கல்லூரி அணி சார்பில் ஜி.ஆர். தேவராஜனும் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் ஜி. லக்ஸ்மனும் தலைமைதாங்குகின்றனர்.

இவ் இறுதிப் போட்டியைத் தொடர்ந்துஇரு அணிகளுக்குமிடையிலானமட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றப் போட்டியும் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் எதிர் வரும் 24-ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(செ-59)

## தென்மராட்சிப் பிரதேச வதிவிட வேளாண்மைப் போட்டி முடிவுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலர்பிரிவில் பிரதேசசெயலகத்தினால் நடாத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியின் முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் கெற்பேலியைச்சேர்ந்த திருமதி. குமாரு மனோன்மணி முதலாம்இடத்தையும் கைதடியைச்சேர்ந்த வேலன் கிருஷ்ணன் இரண்டாம் இடத்தையும் எழுதுமட்டுவாள் வடக்கைச் சேர்ந்த நல்லதம்பி கனகலிங்கம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மேலும் பத்துப்பேர் ஆறுதல் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் இம்மாத இறுதியில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(சி-77)

## மின்மானி பொருத்தல்

[அச்சுவேலி]

வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைமைச் செயலகத்திற்கு மின்சார சபையினரால் அண்மையில் மின்மானி பொருத்தப்பட்டுள்ளது.

[க-57]

## வீதி திருத்தம் முடிவுற்றது

(அச்சுவேலி)

நீர்வேலி வடக்கு சிவசக்தி சனசமூக நிலையத்திற்கு செல்லும் பன்னாலை வீதித் திருத்த வேலைகள் முடிவடைந்துவிட்டன.

இதற்கான 40 ஆயிரம் ரூபா நிதியினை, ஈ.பி.டி.பி. அமைப்பினர் பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டு நிதியில் இருந்துவழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(க-57)

## (இராசி பலன்)

17.03.2000

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி - 4)

துவாதசி பகல் 2.58 வரை, ஆயிலியம் இரவு 7.46 வரை, மரணயோகம். இராகுகாலம் பகல் 11.20 முதல் 12.30 வரை, சுபநேரம் காலை 6.48 முதல் 8.18 வரை, பிரதோசவிரதம்.

**மேடம்:** மனப் போராட்டம், தொழில் கவலை, வீண் வாதம்.

**இடபம்:** மித்திரர் உதவி, கூடிப் பேசுதல், தொழில்சிறப்பு.

**மிதுனம்:** சுற்றத்தார்கவலை, காரிய தடை, அலைச்சல்.

**கடகம்:** தலைமைதாங்கல், வெகுமதி, மனக்களிப்பு.

**சிங்கம்:** அயலவர்துயர், குடும்ப சந்தேகம், இயலாமை.

**கன்னி:** வாதத்திறமை, நற்செய்தி, குடும்பமகிழ்ச்சி.

**துலாம்:** போட்டியில் ஜெயித்தல். தொழில்திறமை, பாராட்டு.

**விருச்சிகம்:** கண்டனம், வீண்செலவு, வீட்டில் குழப்பம்.

**தனுசு:** அவசர முடிவு, குடும்பப் பிரிவு, அதிகாரிகள் வெறுப்பு.

**மகரம்:** சுபகாரியம். பணவிவகாரம் கல்விஞானம்.

**கும்பம்:** வீட்டில் கலகலப்பு, உறவு வளர்தல், எதிர்பாராத சந்திப்பு.

**மீனம்:** வழிப்பயம், ஆசாரக் குறைவு, வீண்சந்தேகம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

(அரியாலை)

யாழ். திருமறைக் கலாமன்றத்தினால் பாஸ்கா காலத்தை முன்னிட்டு நாளை மாலை 5.00 மணிக்கு ''கல்வாரி இராகங்கள்'' என்னும் ஒலிப்பதிவு நாடா வெளியீடு கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத்தின் இசையமைப்பாளர் இசைத்தென்றல் எம்.ஜேசுதாசன் இசையமைப்பில் உருவாக்கப்பட்ட திருப்பாடுகளின் காட்சிநாடகப் பாடல்களின் முதலாவது தொகுதியாக இது வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

(க-36)


அமரர்

## திரு. கிருஷ்ணன் சின்னத்தம்பி

அவர்களின்

## ஓராண்டு நினைவு நாள்



மண்ணகம் 25 - 03 - 1912

விண்ணகம் 29 - 03 - 1999

திதி : பூர்வபக்கத் திரயோதசி

திதி நிர்ணயம்

ஆண்டுவெகு தானியமே அமைபங்குனித்திங்கள்
பூண்டதிரி யோதசியின் பூர்வபக்கம் - ஆண்டவனின்
பேற்றடைந்தார் தவிற்கலைஞர் பெரும்புழார்
சின்னத்தம்பி
சீருற்றே வாழ்ந்தார் தெரி!

மனைவி - சரஸ்வதி -

(கி-130) மகன் - இவ்வநாயகம். பத்மலிங்கம்.



## சிவயோக சுவாமிகளே போற்றி

''எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
ஒரு பொல்லாப்பு மில்லை நாமறியோம்'' எனச்
சொல்லி நின்ற தங்களது வார்த்தைகள்!
ஞான மகா வாக்கியங்கள்! ஞானகுரு
செல்லப்பா சுவாமிகளின் சீடரென அமைந்து
ஞானமார்க்கத்திற்கு ஒளிதந்த சுவாமிகளே!
சொல்லரிய வித்தகச் சித்தரே! அற்புதஞ் செய்
அற்புதனே! போற்றியுமை வணங்குகிறோம்!
''ஏசுவார்கள்! எரிப்பார்கள்!! அஞ்சாமற்
பணிசெய்மின்'' எனமொழிந்த உங்களது
ஆசியுடன் பத்திரிகை பிறந்து வளர்ந்த மண்ணில்
உங்கள் அருள்வாக்கின் ஒளியிங்கே
வீசிவர ''வலம்புரி''யாம் நல்லிதழும் நாடு
வளம்பெறவே நன்னோக்கின் நாதம்
பேசிவளருதய்யா! சிவயோக சுவாமிகளே
உங்கள் திருவடி போற்றி வணங்குகிறோம்!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

[யோகர் சுவாமிகளின் குருபூசையையொட்டியது]

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

## தனியார் நிறுவன மீள் இயக்கம்

# விசேட அனுமதியிலான நிதியுதவி

(தென்மராட்சி)

இலங்கையில் ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் நோக்கமாகக் கொண்டதாகக் தெரிவிக்கப்படும். யாழ்ப்பாணம் - திருநெல்வேலி சேர். பொன்னம்பலம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சர்வதேச பயோடெக் தனியார் நிறுவனத்தை மீளியங்கச் செய்வதற்காக வடக்கின் புனர்வாழ்வு புனருத்தாரண அதிகார சபை (RRAN) அமைச்சரவையின் விசேட அனுமதியின்படி 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிறுவனம் அரிசி, சோளம், மரவள்ளி போன்றவற்றில் இருந்துமாப்பொருள் சாற்றை பிரித்தெடுக்கும் இடை நடவடிக்கைகள் இல்லாமல் நேரடியாகவே அரிசி, சோளம், மரவள்ளி மாப்பொருளை குளுக்கோசாக மாற்றும் புதிய தொழில் நுட்பத்தை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் புத்திஜீவிகளால் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த நிறுவனம் யாழ்ப்பாண மாவட்டத்தில் அரிசி, சோளம், மரவள்ளி ஆகிய புதுப்பிக்கக் கூடிய விவசாய மூலப் பொருட்களின் தரத்தைக் கூட்டவும் விஞ்ஞான ரீதியாக செய்யப்பட்ட ஆராய்ச்சிகளை கைத்தொழில் பொருளாதாரத் துறையில் பிரயோகப்படுத்தும் நடவடிக்கையை அபிவிருத்தி செய்யவும். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பயோரெக்னோலோஜி வழங்கப்பட்ட மாணவர்களுக்கு ஆராய்ச்சி வசதிகளை வழங்கிவருவதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் சுய தொழில் வேலைகளை மேற்கொள்வதற்கும் சிறுகைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதில் சர்வதேச பயோடெக்நிறுவனம் பெரிதும் உதவியாகவிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(க-77)

## இன்று கருத்தரங்கு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் சாந்திகம் உளவள நிலையத்தில் இன்று 17 ஆம் திகதி ''தற்கொலை முயற்சிகளும் அதன் விளைவுகளும்'' என்ற கருத்தை வலியுறுத்தும் வகையிலான கருத்தரங்கு ஒன்று நடைபெறுமென சாந்திகம் உளவள நிலைய வட்டாரத்தினர் அறிவித்துள்ளனர்.

(14)

## தேசிய போஷாக்கு வாரம்

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் இம்மாதம் 19 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை தேசிய போஷாக்கு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(க-36)

## பருத்தித்துறை பிர. செயலர் பிரிவில்

# 1500 பேருக்கு உதவிகள் வழங்க பட்டினிக்கு எதிரான நிறுவனம் உறுதி

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 1500பேருக்கு, பட்டினிக்கெதிரான நிறுவனம் உதவிகளை வழங்கவுள்ளது.

இதற்கமைய கிராமசேவகர் பிரிவுகளூடாக பயனாளிகளுடைய விபரங்களைப் பெற்று பழமரக்கன்றுகள், வீட்டுத்தோட்ட உபகரணங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்சமயம் நடைபெற்று வருகிறது.

அத்துடன், உணவு பதனிடும் பயிற்சி, பாடசாலைகளில் தோட்டம் அமைப்பதற்கான முயற்சிகளை ஊக்குவித்தல், குளங்கள் புனரமைப்புப் போன்ற பணிகளில் ஈடுபடவிருப்பதாகவும் தெரியவருகிறது.

(க-43)

## திருத்த வேலைகள்

(அரியாலை)

கண்டிவீதியில் அரியாலை திறந்தவெளி அரங்கிற்கு அண்மையில் உள்ள பாலத்தில் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை வடிகாலும் அமைக்கப்படுகிறது. மழை காலங்களில் இப்பகுதி குடியிருப்பு நிலங்களில் வெள்ள நீர் தேங்கிநின்று மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குவது குறிப்பிடத்தக்கது.

(க)

## இராணுவப் பெண் சிப்பாய் படுகொலை

# மாதர் ஆர்ப்பாட்டம்; இரு சந்தேக நபருக்கு ஆஜராக எவருமில்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவத்தின் பெண்கள் பிரிவைச் சேர்ந்த இனோகா செவ்வந்தி (24 வயது) என்பவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட கோடீஸ்வர வர்த்தகரும் மற்றும் மூவரும் நேற்று கம்பகா நீதிபதி திருமதி. ஐராங்கனி பெரேரா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது முதலாம், இரண்டாம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகக் கூடாதெனக் கோரி நீதிமன்றத்துக்கு வெளியே மாதர் அமைப்பினர் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தினர்.

பிரஸ்தாப் நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது முதலாம் இரண்டாம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை.

மருத்துவ அறிக்கைகள் கிடைக்காத காரணத்தால் வழக்கு விசாரணை இம்மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கடவத்தைப் பகுதியைச் சேர்ந்த இனோகாவை அவரது கோடீஸ்வரக் காதலன் அனுராதபுரம் சென்று இராணுவத்திலிருந்து பொய்க் காரணம் கூறி அழைத்து வந்து தனது ஆசைநாயகி [ஒருபிள்ளையின் தாய்] வீட்டில் வைத்து தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தியதாகவும் முதலில் பெற்றோரின் சம்மதம் தேவை என இனோகா கூறியதாகவும் அங்கு வைத்து பல தடவைகள் இனோகாவுடன் தாம்பத்திய உறவு கொண்ட பிரஸ்தாப நபர் பின்னர் அங்கு வைத்து அவரைக் கழுத்து நெரித்துக் கொலை செய்து. மயானம் ஒன்றின் சமாதியைக்கிளப்பி அதற்குள் சடலத்தைப் போட்டு மூடும் முயற்சி தோல்வியாகவே குருகுலாவ என்ற இடத்திலுள்ள தனது ஆடம்பர மாளிகை வளவுக்குள் தனது சகாக்களுடன் சேர்ந்து சடலத்தைப் புதைத்ததாகவும் ஆறு மாதங்களின் பின் பொலிஸாரினால் சடலம் தோண்டி எடுக்கப்பட்டதாகவும் இச்சம்பவம் பற்றி விவரிக்கப்பட்டது.

சடலம் தோண்டி எடுக்கப்பட்ட போது அவ்விடத்தில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் ஆத்திர மேலீட்டால் பிரஸ்தாப கோடீஸ்வரக் காதலனது வீட்டையும் உடமைகளையும் அடித்து நொருக்கியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவம் தென்னிலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பிடத்தக்கது.

[சி]

## பங்குனி உத்தர விழா

(புலோலி)

பலாலி ஆசிரியர்கலாசாலை சைவமாணவர்மன்றம் சந்நிதியான் ஆச்சிரமசைவ கலை பண்பாட்டுப்பேரவையின் அனுசரணையுடன் நடாத்தும் பங்குனி உத்தரவிழா எதிர்வரும் 20ம் திகதி பலாலி ஆசிரியர் கலாசாலை உப-அதிபர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சைவமாணவர் மன்றத் தலைவர் எம். சண்முகமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்துவார். பலாலி ஆசிரியர்கலாசாலை அதிபர் கே. சதாசிவமூர்த்தி வாழ்த்துரை நிகழ்த்துவார்.

கலாநிதி காரைசுந்தரம்பிள்ளை, கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியேரும் உரையாற்றுவர்கள்.

அத்துடன் திரு. எஸ். லலீசன் தலைமையில் இன்றைய நிலையில் சமயச்சடங்காசரங்களில் முடங்கிவிட்டது. முடங்கவில்லை என்றவிடயம் பற்றிய பட்டிமன்றமும் ''வள்ளி திருமணம்வில்'' லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன.

(சி-52)

## உடுத்துறையில் ஷெல் வீச்சு மக்கள் பீதியுடன் இரவைக் கழித்தனர்!

உடுத்துறை வத்திராயன் பகுதிகளில் கடந்த திங்கள் இரவு விடுதலைப் புலிகளுடன் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது,

இச்சம்பவத்தின் போது வெளிச்சக்குண்டுகளின் மத்தியில் பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன, இதனையடுத்து இப்பகுதிமக்கள் பீதியுடன் அன்றைய இரவைத் திகிலுடன் கழித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

[வ-43]

## முச்சக்கர வண்டி சாரதியை

# விளக்கமறியலில் வைக்குமாறு மட்டு. நீதிவான் உத்தரவு

முச்சக்கர வண்டியினால் வயோதிபரை மோதி அவர் பலியாகக் காரணமானவர் என நம்பப்படும் முச்சக்கர வண்டி சாரதியான அப்துல் றஹீம் கௌபர் என்பவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்புமாவட்ட பதில் நீதிவான் கே. தியாகராஜா உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்லடியில் நடந்த இச்சம்பவத்தின் போது 70 வயது வயோதிபர் ஒருபர் ஸ்தலத்திலே பலியானது இங்கு குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு காத்தான்குடி நெடுஞ்சாலையில் தினமும் முச்சக்கர வண்டிகள் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-60

## யுவதி காயம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள நரியன் குண்டடிக்கு அருகாமையில் வந்த மோட்டார் சைக்கிள் அவ்வழியே வந்து கொண்டிருந்த சைக்கிலுடன் மோதியதுடன் ஸ்தலத்தில் நிற்காதுவிரைந்து சென்றுள்ளது.

மேற்படி சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நல்லூரைச் சேர்ந்த இ. பவித்ரா [வயது19], காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[க-105]

# தமிழர் வரலாற்றில் தனக்கென ஓர் தனியான இடம்பெறுபவர் 'இந்துபோர்ட்'

## சைவவித்தியா விருத்திச் சங்க பவ்ளவிழாவில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சொல்லும் செயலும் ஒன்றாய் வல்ல துணிவு கொண்டதோர் சிறந்த சமூக மேன்மையாளர், எங்களிடையே வாழ்ந்து தமிழுக்கு வளம் சேர்த்த பெரியார் ''இந்து போர்ட்'' இராசரத்தினம்.

தளராத தமிழ்ப்பணியால் வரலாற்றிலேயே தனக்கென ஓர் தனியான இடத்தைப் பெற்று மறைந்தும் மறையாது மக்கள் மனங்களில் வாழ்பவர்.

கடந்த சனிக்கிழமை திருநெல்வேலிச் சைவவித்தியா விருத்திச் சங்க பவளவிழாவின் முதலாம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சைவ வித்தியா விருத்திச் சங்க தலைவரும், யாழ். பல்கலைக்கழக பட்டப்பின்படிப் புகள் பீடாதிபதியுமான பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம் பெற்ற விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

''இந்துபோர்ட்'' இராசரத்தினம் அவர்கள் வாழ்க்கை வரலாறு வெறுமனே படிப்பதற்குமட்டுமன்று. அதனைப் படித்து அதன்வழிநாம் ஒழுக வேண்டும். இதுவே அவர்தம் பணிக்கு நாம்புரியும் நன்றிக் கடன்.

சமயத்தினதும் கல்வியினதும் வளர்ச்சிகருதி தனது அரசதொழிலைக்கூட துறந்த அவருடைய தியாகமனம் நம்மில்எத்தனை பேருக்கு வரும்?

இவ்வாறான பெரியார்கள் புரிந்த தியாகம் தான் இன்றைக்கு எம்மை கல்வியாளர்களாய் சிறந்த பண்புடைகவர்களாய் சமயப்பற்றாளர்களாய் தலை நிமிர வைத்திருக்கிறது.

இன்றைக்கு இந்த பவளவிழாக் காணும் அளவுக்கு சைவ வித்தியா விருத்திச் சங்கம் தலை நிமிர்ந்து நின்று ஆதரவற்ற வறிய சிறுவர்களை அன்புக் கரம் நீட்டி அணைத்தெடுக்க, அன்றைக்கே பாதை வகுத்த பெரியார் இராசரத்தினம் என்று கூறினால் மிகவும் பொருத்தமானதே.

இப்பெரியார் விதைத்த வித்து பெரு விருட்சமாக ஓங்கி நிற்கிறது. நூற்றுக்கணக்கான சிறார்களுக்கு, அவர்களது வளமான வாழ்வுக்கு நிழல் பரப்பி நிற்கிறது.

இவ்விருட்சத்திற்குமேன்மேலும் உரமூட்டி இனி வரும் சந்ததிக்கும் இவ்விருட்சத்தின் நிழல் கிடைக்கத்தக்க பயன்மிகு பணிகளில் இன்றே இறங்க ஆயத்தமாகுவோம் என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில், நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் மற்றும்பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(க-9)

## விபத்தில் மரணம்

(புலோலி)

நேற்று முன்தினம் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் காயமடைந்த, புலோலி தெற்கைச் சேர்ந்த நரசிங்கன் சத்தியரூபன்[13]என்ற சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சமயம் நேற்று மரணமானார்.

(க-43)

## ஓம் சக்தி படத்திலிருந்து குங்குமம் கொட்டும் அதிசயம்

(சென்னை)

ஓம் சக்தி சாமிபடத்திலிருந்து கிலோக்கணக்கில் குங்குமம் கொட்டும் அதிசயம் தமிழ்நாடு - நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கேரள மாநிலம் பாலக்காட்டைச் சேர்ந்தவர் கிருஷ்ணன் இவரது மனைவி உஷா (வயது 40) நீலகிரி மாவட்டத்தில் வசித்து வரும் இவர்களில் உஷா மிகுந்த சாமிபக்தை எனவே தனது வீட்டிலிலும் சக்திப் படம் வைத்து தினமும் வணங்கி வந்தார். ஒருநாள் அவர் வழமைபோல் சாமியை வணங்கிவிட்டு உறங்கச் சென்ற போது சாமிப்படம் முன் நாகம் ஒன்று படமெடுத்து ஆடுவது போல் கனவு கண்டு திடுக்கிட்டு எழுந்தார். அவர் சாமிப் படத்தைப் பார்த்த போது அதிலிருந்து சிறிதுசிறிதாகக் குங்குமம் கொட்டிக் கொண்டிருந்தது. தொடர்ச்சியாகக் கொட்டிய குங்குமம் மூன்றாவது நாள் கிலோக் கணக்கில் சேர்ந்தது. இந்த அதிசயத்தை இம் மாவட்டத்தைச் சேர்ந்த சகல மதத்தவர்களும் நேரில் வந்து பார்த்து அதிசயிப் பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எஸ்)

# கிளிங்டனின் தெற்காசிய விஜயம்

# விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள்

அமெரிக்க அதிபர் பில் கிளிங்டனின் தெற்காசிய விஜயத்தையிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பங்களாதேஷில் ஒருநாளும் இந்தியாவில் ஐந்து நாட்களும் தங்க இருக்கும் அதிபருக்கும் இந்திய பாதுகாப்பு அதிகாரிகளும் பலத்த பாதுகாப்புக் கொடுக்க இருக்கிறார்கள்.

அதிபர் கிளிங்டன்டாக்கா செல்லும் போது பல ஆயிரக் கணக்கான துணை இராணுவப் படையினர் பாதுகாப்பு அளிக்க இருக்கின்றனர். நகரின் மையத்தில் உள்ள பாதை கள்மூடப்படும். அதிபர் கிளிங்டனும் அவரது பரிவாரங்களும் தங்கும் விடுதிக்குக் கூட யாரையும் அனுமதிக்கமாட்டார்கள் என்று செய்திகள் கூறுகின்றன.

டாக்காவில் கிளின்டன் அரச பேச்சு வார்த்தைகள் நடத்தும் பொழுது நகரின் பலவீதிகள்பூட்டப்பட்டிருக்குமென்றும் அன்று விடுமுறை தினமானதால் பெரும் பகுதி மக்கள் நகருக்கு வெளியே விடுமுறையில் சென்று விடுவார்கள் என்று கூறப்படுகியது.

இந்தியாவில் டில்லியிலுள்ள ஹொட்டேல் ஒன்றில் தங்கியிருப்பார். அது பலத்த சுற்றுப் பாதுகாப்புகளுடன் சிறிய வெள்ளை மாளிகை போல் பாதுகாப்புடன் திருத்தப்பட்டுள்ளதாகவும் உறுதியான கதவுகள் போடப்பட்டிருப்பதாகவும் இந்தியப் பத்திரிகைகள் கூறுகின்றன.

அங்கு கிளின்டனிற்குப் பிடித்த படுக்கையும் இடப்பட்டிருப்பதாகவும் பிடித்தமான உணவுவகைகள் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அதிபர் இந்தியாவில் ஐந்து நாட்கள் இருப்பார் அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இரகசியமாக வைக்கப்பட்டிருக்குமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

அவருக்கு குறைந்தது எட்டு மெய்க்காவலர் குழு இருக்குமென்றும் அவற்றில் முதல் மூன்று குழுக்களும் அமெரிக்க மெய்க்காவலர்கள் அடங்கியதாக இருக்குமென்றும் நான்காவது குழுவின் அதிநவீன பாதுகாப்புக் குழுவும் எட்டாவது குழுவில் டெல்லிப் பொலிஸ் பிரிவும் புதுடில்லியை விட்டுதாஜ்மாலைப் பார்க்கச் செல்லும் பொழுதும் ஜெய்பூருக்குச் செல்லும் பொழுதும் பாதுகாப்பு பலமாகவே இருக்கும்.

ஜெய்பூரில் அவர் மிகப்பாதுகாப்பான ஹொட்டலில் தங்குவார். அங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்படுமென்று சொல்லப்படுகின்றது.

பம்பாய் போன்ற நகர்களுக்குச்செல்லும் விபரங்கள் இன்னும் வெளியாகவில்லை என்று செய்திகள் கூறுகின்றன. (து)

## இந்திய-இஸ்ரேல் பாதுகாப்பு உறவு புதுமெருகுபெறும்

(புதுடில்லி)

இந்தியாவிற்கும்இஸ்ரேலுக்கும் இடையேயான பாதுகாப்புப்பரிமாற்றங்கள் புதுப்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் கடற்படை அட்மிரல் ஒருவரின் தலைமையில் அடுத்த மாதம் 1000 கடற்படை அதிகாரிகளும், மாலுமிகளும் இஸ்ரேலுக்குச் செல்லவிருக்கிறார்கள்.

ஜம்முகாஷ்மீரில் ஏற்படும் அத்துமீறல்களும் பாகிஸ்தான் எல்லைப் புறங்களில் நிகழும் படைக் குவிப்பும் இந்தியப் பெரு நகரங்களை தாக்குவதற்குரிய ஏவுகணைகளை பாகிஸ்தான் பாவிக்க முனைவதும் கருத்திற் கொள்ளப்பட்டே இந்திய - இஸ்ரேலுடன் உறவுகளை மேம்படுத்த முற்படுகிறது. எனக் கூறப்படுகிறது. (எஸ்-து)

## இரு இதயங்களுடன் வாழும் சிறுவன் வைத்தியர்கள் மத்தியில் சந்தேகம்

(பெங்களூர்)

பெங்களூர் தாவணகெரே மாவட்டம் காஷிபுரா கிராமத்தைச் சேர்ந்த ஹனுமந்தப்பா என்ற சிறுவனுக்கு வலது பக்கத்தில் இதயம் அமைந்துள்ளது.

வழமையில் மனிதர்க்கு இடது புறத்திலேதான் இருதயம் அமைந்திருக்கும். இலட்சத்தில் ஒருவர்க்கே இவ்வாறான புறநடை காணப்படுவதுண்டு.

ஆனால் மேற்படி சிறுவனுக்கோ இருபக்கமும் ஒரே மாதிரியான இதயத்துடிப்பு காணப்படுகிறது. இது இச்சிறுவனுக்கு இரு இதயங்கள் இருக்கின்றனவா என்கின்ற சந்தேகத்தினை மருத்துவ உலகில் தோற்றுவித்துள்ளது. (க-9)

## அமெரிக்க இராணுவக் கட்டமைப்பை வேவு பார்ப்பதில் சீனா நாட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சீனாவின் உளவுவேலைகள் அதிகரித்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

சீனா உளவுவேலை குறித்து அமெரிக்கப் புலனாய்வுத் துறைகளான சி. ஐ. ஏ. எப். பி. ஐ. என்பன கூட்டாக இணைந்து நடாத்திய ஆய்வுகளில் இவ்வுண்மை தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் முன்னெப்போதையும் விட சீனாவின் உளவுவேலைகள் அதிகரித்திருப்பதையொட்டி அமெரிக்கா மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் மேற்படி புலனாய்வு அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கல்லூரி மாணவர்கள், விஞ்ஞானிகள், சுற்றுலாப் பயணிகள்மூலம் சீனா உளவு வேலையை மேற்கொள்கிறது.

அமெரிக்காவில் சீனாவைச் சேர்ந்த அனேக மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். அவர்கள் அறிவியல், தொழிநுட்பம் போன்ற பாடங்களைத் தேர்ந்தெடுத்து கற்பதன்மூலம் அமெரிக்கா பற்றிய பல தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

அமெரிக்காவின் இராணுவக்கட்டமைப்பில் வேவு பார்ப்பதிலும் சீனா அதிக நாட்டம் காட்டிவருவதுடன், அமெரிக்கர்களிடம் இருந்தும் தந்திரோபாயமான முறையில் தகவல்களைப் பெற்றுவிடுகிறது. எனவும் அவ் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-9)

## பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிப்பதனைத்தவிரவேறு வழி இல்லை

### - அமெரிக்கா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுவதை இஸ்லாமபாத் உடனடியாக நிறுத்தாவிட்டால் பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக அறிவிப்பதைத்தவிர அமெரிக்காவிற்கு வேறுவழி இல்லையென அமெரிக்க அலுவல் குழு அறிவித்துள்ளது.

எல்லைக்கு அப்பால் இருந்து பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுவதை நிறுத்துமாறு பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரை அமெரிக்க அதிபர் வற்புறுத்த வேண்டும் எனவும் 22 உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்க அலுவல் குழுவின் தலைவர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (க-5)

## பரபரப்பான சூழ்நிலையில் பாப்பரசர் திங்களன்று ஜெருசலேம் விஜயம்

(வத்திக்கான்)

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் ஜெருசலேமின் புனித பூமிக்கு திங்கட்கிழமை விஜயத்தை ஆரம்பிக்கின்றார்.

இவர் ஆராதனை நடத்தும் போது வெளியிடும் கருத்துக்களை யூத-பாலஸ்தீன தீவிரவாதிகள் மிகக் கவனமாக அவதானிக்க விருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலின் 60 இலட்சம் சனத்தொகையில் 1 இலட்சத்து 70 ஆயிரம் பேர் கத்தோலிக்கராவர்

வத்திக்கானும் இஸ்ரேலும் 1994-ஆம் ஆண்டு இராஜதந்திர உறவுகள் கொண்டபோதும் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் இருப்பதை வத்திக்கான் விரும்பவில்லை.

பாப்பரசரின் வருகையை அறிந்த இஸ்ரேல் பிரதமர் எகுத்பராக் கிழக்கு ஜெருசலேத்தின் மீது இஸ்ரேல் கொண்டுள்ள முடியுரிமையைப் பாதிக்கும் வகையில் எந்த வித நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் என்று பாப்பரசரும் வலியுறுத்தல் விடுத்துள்ளார் என்று செய்திகள் கூறுகின்றன. (து-சி)

# கவிஞர்களுக்கு உரியகௌரவம் இந்நாள்

# பத்திரிகைகள் மூலம் கிடைக்கின்றது

### கவிக்கோ அப்துல்ரஹ்மான் பெருமிதம்

(சென்னை)

''அன்றைய காலகட்டத்தில் பத்திரிகைகள் கவிதைகளைப் பிரசுரிப்பதில்லை. எத்தகைய சிறப்புமிக்க கவிதையானாலும் ஆளுங்கட்சி எதிர்க்கட்சியை ஓரங்கட்ட எண்ணுவது போல் பத்திரிகைகள் கவிஞர்களை மதித்து அவர்களது கவிதைகளை வெளியிடாத நிலை வேதனைக்குரியதாயிருந்தது. இன்று அந்நிலை மாறிவிட்டது. பத்திரிகைகள் உரிய முக்கியத்துமளித்து கவிதைகளை வெளியிட்டு கவிஞர்களை உற்சாகப்படுத்துகின்றன. ஆயினும் அக்கவிதைகள் அனைத்தும் இலக்கிய நயமுள்ளவை இலக்கணச் சிறப்பும் பெற்றவை என்று கூறுவதற்கில்லை''

இவ்வாறு தமிழகத்தின் பிரபல கவிஞர்களில் ஒருவரான கவிக்கோ அப்துல் ரஹ்மான் கடந்த வியாழக்கிழமை இந்திய வானொலிக்கு அளித்த விஷேட பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார்.

''மகாகவி பாரதியாருக்குப்பின் கவிதையுலகு எனும் வகையில் பெரும்இடைவெளி ஒன்று இருந்தது. அக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் பாவேந்தர் பாரதிதாஸனின் பங்களிப்பு மிளிர்ந்தது. அந்தவகையில் கம்பதாஸன் கவிஞர் சுரதா ஆகியோரது கவிப்பணியும் அவர்தம் கவிச்சிறப்பும் நினைவில் கொள்ளப்பட வேண்டியவையே.

'மணிக்கொடி' காலத்துக்குப் பின் வந்த ஒவ்வொரு கால கட்டத்திலும் பலதரப்பட்ட கவிஞர்களது பேராற்றலும் கவிதை வடிவில் பத்திரிகைகளில் வெளிவந்து பயன் மிகத்தந்தன'' என்றும் கவிக்கோ அப்துல் ரஹ்மான் தனது மேற்படி பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க அவன் என்ற திரைப்படத்தில் (ராக்கபூர்- நர்கீஸ் நடித்தது) வெளியான கல்யாண ஊர்வலம் வரும் உல்லாசமே தரும் என்ற பாடல் 'மின்னல் போலாகுமிந்த வாழ்க்கையே' என்றபாடல் என்பனவும் 'அக்பர்' படத்தில் வெளிவந்து மிகப் பிரபல்யம் பெற்ற கனவு கண்ட காதல் கதை் கண்ணீராச்சே என்ற பாடலும் மற்றும் பலவும் கம்பதாஸன் இயற்றியவையே என்பதும் 'ராஜமுக்தி, என் தங்கை, நாடோடிமன்னன் போன்ற படங்களில் ஈடிணையற்ற பாடல்களை யாத்தவர் கவிஞர் சுரதா என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கவை.

இக்கவிஞர்களது பல படைப்புகள் கவிதைத் தொகுப்புகளாக வெளியாகியிருப்பதும் நினைவில் கொள்ளத்தக்கவையே. (சி)

## கூட்டங்கள் ஊர்வலங்களுக்குத் தடை பாகிஸ்தானில் பாதுகாப்பு ஸ்திரம்

பாகிஸ்தானில்பொதுக்கூட்டங்கள் அரசியல் பொதுக் கூட்டங்கள் ஊர்வலங்கள் நடத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் பில் கிளிங்டனின் விஜயத்தை ஒட்டியும் நாட்டில் அசம்பாவிதங்கள் ஏற்படாதிருக்கவும் இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒலி பெருக்கிகள் பாவனைக்கும்தடைவிதிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. [து]

## சுட்டு வீழ்த்தப்பட்ட விமானம்

(தெஹறான்)

ஈரானுக்குச் சொந்தமான தானியங்கி விமானம் ஒன்றினை ஈராக் சுட்டுவீழ்த்தியுள்ளளது.

கடந்த திங்களன்று தமது தேசிய வான்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாலே ஈரானின் விமானத்தைச் சுட்டுவீழ்த்தியுள்ளதாக ஈராக் அரசு அறிவித்துள்ளது. (க-9)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# பொதுஅறிவுவினாக்கள்

இல - 05 (தொகுப்பு:- யூட்)

★ பின்வரும் வினாக்களுள் உலகில் பெரியவை எவை?

(1) மிகப் பெரிய பூங்கா ..........................
(2) மிகப் பெரிய வளைகுடா ..........................
(3) மிகப் பெரிய ஜனநாயகநாடு ... ..........................
(4) மிகப் பெரிய தனிநாடு ..........................
(5) மிகப் பெரிய வங்கி ..........................

★ பின்வரும் நாடுகளிற்கானதலை நகரங்கள் எவை?

(6) போத்துக்கல் ..........................
(7) இந்தோனேசியா ..........................
(8) சோமாலி ..........................
(9) சிரியா ..........................
(10) தென்கொரியா ..........................

★ பின்வரும் தினங்களிற்கான நாட்கள் எவை?

(11) செஞ்சிலுவை தினம் ..........................
(12) அகதிகள் தினம் ..........................
(13) உலக வறுமை ஒழிப்பு தினம் ..........................
(14) எயிட்ஸ் தடுப்பு தினம் ..........................
(15) சர்வதேச நல் ஒழுக்க நாள் ..........................

★ பின்வரும் நாடுகளின் பாராளுமன்றங்களை எவ்வாறு அழைப்பர்?

(16) ஜேர்மனி ..........................
(17) தென்ஆபிரிக்கா ..........................
(18) சுவிஸ்லாந்து ..........................
(19) ஐஸ்லாந்து ..........................
(20) இங்கிலாந்து ..........................

(21) ஐரோப்பிய பொருளாதார கட்டமைப்பு எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? ..........................

(22) சர்வதேச பச்சை சிலுவை நிறுவனத்தின் நோக்கம் யாது? ..........................

(23) தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பின் தலைமைக் காரியாலயம் எங்குள்ளது? ..........................

(24) சமாதானத்திற்காக வழங்கப்படும் நோபெல் பரிசுடன் தொடர்புடைய நாட்டினதும் நகரத்தினதும் பெயர்களைத் தருக?

(25) பாலர்களிற்குக் கல்வியூட்டும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

(26) புவி நடுக்கங்களை பதிவு செய்யும் முதல்கருவி எத்தனையாம் ஆண்டு யாரால் கண்டுபிடிக்கப்பட்டது? ..........................

(27) உருளைக்கிழங்கு முதன் முதலில் எங்கு பயிரிடப்பட்டது? ..........................

(28) அமெரிக்காவின் தேசியக் கொடியில் எத்தனை கோடுகள் உள்ளன? ..........................

(29) வெண்யானைகளின் நாடு என்று கூறப்படுவது எதனை? ..........................

(30) பிராணிகளை ஏற்றிக் கொண்டு செல்லக் கூடிய முதலாவது வெப்பமான காற்று பலூனை கண்டு பிடித்தவர்கள் யார்? ..........................

(31) இத்தாலி நாட்டின் கொடியை வடிவமைத்தவர் யார்? ..........................

(32) அமெரிக்காவின் அதியுயர் இலக்கியச் சாதனைக்கு வழங்கப்படுகின்ற பரிசின் பெயர் என்ன? ..........................

(33) டாஸ் கப்பிற்றல என்னும் நூலை எழுதியவர் யார்? ..........................

(34) உலகில் எழுதும் பழக்கத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் யார்? ..........................

(35) இலங்கையில் எத்தனையாம் ஆண்டு தேசிய அடையாள அட்டை வழங்கி வருகிறது? ..........................

[36) குறுக்கெழுத்து புதிரினை அறிமுகப்படுத்தியவர் யார்? ..........................

[37) தோடம்பழத்தின் பிறப்பிடம் யாது? ..........................

(38) ஆங்கில அகராதியை முதன் முதலில் தொகுத்தவர் யார்? ..........................

(39] LASER என்பதன் விரிவாக்கம் யாது?

(40) யூல் அலகு முறையைக் கொண்டு எதனை அளப்பர்? ..........................

குறிப்பு:-

இதற்கான விடைகளை 23-03-2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

---

**அறிவியல் பகுதி வினா இல. 05**

**வலம்புரி**

இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

முழுப்பெயர்:- ..........................

சொந்த முகவரி:- ..........................

கையொப்பம்:- ..........................

இப்படிவத்தைப் பூரணப்படுத்தி உங்கள் விடையுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

---

இவ்வருடம்,

# தாதியர் சேவையில் புதிதாக 4000 பேர் இணைக்கப்படுவர்

## அமைச்சர் ஸ்ரீபால தெரிவிப்பு

(கொழும்பு)

தாதிமார் சேவையில் மேலும் நாலாயிரம் தாதிமார் இவ்வருடம் சேர்த்துக் கொள்ளப்பட விருக்கிறார்கள் என அமைச்சர் நிமால் ஸ்ரீபாலடீசில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அரச வைத்திய சாலைகளில் நிலவும் பற்றாக்குறையினைத் தவிர்க்கும் பொருட்டு இவ்வருட யூன் மாதமளவில் 1500 தாதியர் சேவைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

அத்துடன் நாட்டில் தாதிமார் பயிற்சிக் கல்லூரிகள் நிறுவப்பட இருப்பதுடன் தாதிப்பயிற்சி பெற்றவர்களுக்கான மேலதிக பயிற்சி வழங்கும் நிலையமும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேசமயம்

1997 இல் தாதியர் பற்றாக்குறையை நீக்கும் வகையில், நாடுதழுவிய ரீதியில் 6 ஆயிரம் தாதியர் சேவையில் அமர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## விஷமிகளால் வைக்கோல் நாசம்

மாதகல் பகுதியில் வயலுக்குள் விடப்பட்டிருந்த வைக்கோல் குவியல் விஷமிகள் சிலரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் இரவு வேளையில் நடைபெற்றதால் வைக்கோல் குவியல் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது. (எஸ்)

## மதிற்சுவர் சரிந்தது

(அரிபாலை)

யாழ். கனகரத்தினம்மத்திய மகா வித்தியாலய மதிற் சுவரின் ஒரு பகுதி கடந்த திங்களிரவு நாவலர் வீதியின் ஓரமாகச் சரிந்து வீழ்ந்தது.

இரவு நேரமாகையால் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இது நீண்டகாலமாக பாரிய வெடிப்புகளுடன் சிதைவுற்றுக் காணப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்)

## விமான விவகாரம் தொடர்பாக ஜேர்மன் பொறியியலாளர் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு கட்டானை வீதியில் தலகாகென்ட் பகுதியில் சிறியரக விமானம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

60 குதிரை வலுசக்தி இயந்திரத்தைக்கொண்ட இவ் விமானம் அல்ற்றா வைலற் முறையில் தயாரிக்கப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

இவ்விமானம் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்ததகவலை அடுத்து நீர்கொழும்புப் பொலிஸார் அதனைக் கைப்பற்றியுள்ளனர்;

இவ்விமானத்தை தயாரித்த ஜேர்மன் தொழில் நுட்பவியலாளர் ஒருவர் பயங்கரவாததடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஞாயிறன்று நல்லூரில்

## நமசிவாயதேசிகர் சதாபிஷேக பெருவிழாவுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பேராசான் இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் அவர்களின் சதாபிஷேகப் பெருவிழா எதிர்வரும்19-ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

தேசிகரின் சிரேஷ்ட மாணவர் சிவாக ஞானபாஸ்கரன், சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் தலைமையிலான அந்தணர் குழுவினர் கிரியைகளை நிகழ்த்தி வைப்பர்.

காலை 9.00 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்துநல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்திற்கு பேராசான் தம்பதியினர் ஊர்வலமாக அழைத்து வரப்படுவர்.

கௌரவிப்பும் நூல் வெளியீடும் மேற்படி மணிமண்டபத்தில் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பாலர் ஞானோதய சங்கத் தலைவர் திரு. கே. ரி. பால சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

மாவை ஆதீனம் மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரைகள் நிகழ்த்துவர்.

விழா நாயகர் கௌரவிப்பை கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா நிகழ்த்துவார்.

இதனையடுத்து தேசிகர் சதாபிஷேகமலர் 'தேசிகம்' வெளியீடு நடைபெறும் தேசிகர் அவர்களின் ஆக்கங்களின் தொகுப்பான 'வித்தகர் தரிசனம்' வெளியீடும் நிகழும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி தா. தணிகாசலம்பிள்ளை, கலாநிதி எஸ். சிவலிங்கராஜா, திரு. ஆறு திருமுருகன், பண்டிதர், வ. பேரின்பநாயகம், க. சிவராமலிங்கம், திரு. ச. சிவானந்தம் பண்டிதர் ம. கடம்பேஸ்வரன், கவிஞர் மன்னவன் கந்தப்பு ஆகியோர் பாராட்டுரைகள் நிகழ்த்துவர்.

தேசிகர் அவர்களின் ஏற்புரையையடுத்து பாலர் ஞானோதய சங்கச் செயலாளர் வைத்திய கலாநிதி க. சிதம்பரநாதனின் நன்றியுரை இடம் பெறும். (எஸ்)

## பொது அறிவு வினா இல. 04

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

(01) தி. கிரிதரன், எழுதுமட்டுவாள்,
(02) சி. சயந்தன். வட்டுக்கோட்டை.
(03) வே. தேவஞானேஸ்வரன், மிருசுவில்.
(04) சு. கர்ணன், எழுதுமட்டுவாள்.
(05) சி. சிறீரகுபதி, கரவெட்டி.
(06) ந. கோசலா, ஓட்டுமடம்.
(07) ஒ. வஸ்ரலா, நெடுந்தீவு.
(08) யோ. பார்த்தீபன், சாவகச்சேரி.
(09) க. பிரியவதனா, நல்லூர்.
(10) தெ. வக்ஷலா, பளை.
(11) இ. சிவலிங்கம், வேலணை.
(12) பொ. தர்ஷினி, யாழ்ப்பாணம்.
(13) லோ. சிந்துஜா, யாழ்ப்பாணம்.
(14) பா. லக்ஷ்மன், சண்டிலிப்பாய்,
(15) ஜெ. ஜெயநேசன், குருநகர்.
(16) பி. குணபாலன், கோண்டாவில்.
(17) ஆ. தாட்சாயினி, ஆனைப்பந்தி,
(18) ஜே. பிரதீபா, கொக்குவில்.
(19) ஜெ. ஜோண்சன், பருத்தித்துறை.
(20) வி. நவரெட்ணம், கொக்குவில்.
(21) மு. சிவகணேசன், நெல்லியடி
(22) கே. புஸ்பலதா, நாவாந்துறை,
(23) சி. கஜந்தன், சுன்னாகம்.
(24) நா. அபிராமி, திருநெல்வேலி.
(25) கி. குமரவடிவேல், சாவகச்சேரி,
(26) பே. பிரதீபன், மிருசுவில்.

## பொது அறிவு வினா இல. 04 இற்கான விடைகள்

(01) பிரிட்டிஸ் நூதன சாலை - லண்டன்
(02) பிக்பெக் மணிக்கூடு (03) கஸ்பியன் கோய்மேயர் ஏரி
(04) ஸேன்ஸ டவர் (05) இஸ்ரிக் (யப்பான்)
(06) லியன்னா (07) பெய்ரூட் (08) அபுஜா
(09) டாக்கா (10) மெக்சிக்கோ
(11) ஜூன் 26 (12) ஒக்ரோபர் 4
(13) ஒக்ரோபர் 10 (14) மே 15 (15) ஜூலை11
(16) ரிக்ஸ்டாக் (17) தேசியமக்கள் காங்கிரஸ்
(18) பெடரல் பாராளுமன்றம்
(19) போல் கெட்டிங் (20) நெசட் (21) பெஸோ
(22) பாக்ட் (23) கயாட் (24) டொலர்
(25) லீரா (26) பெல்ஜியம் (27) பமீர்
(28) துருக்கி (29) அயர்லாந்து (30) கியூபா
(31) 1971 ல் (32) 1974 ல்
(33) சிறாப்பூச்சி (34) முதலை
(35) கி.மு. 421 ல் (36) அலெக்ஷாண்டர் ஷார்ப்
(37) தக்காளி (38) லீபியா (39) 70தீவுகள்
(40) கிறீஸ்

## கிளிநொச்சி வைத்தியசாலையில்

# கடந்த பெப்ரவரியில் மட்டும் 11 நோயாளிகள் உயிரிழப்பு

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த பெப்ரவரி மாதம் மட்டும் 12 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 5பேர் மலேரியா நோயினால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் வைத்தியசாலையில் இதே மாதத்தில் 19ஆயிரத்து 138பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்றுள்ளனர். இதில் 3910 பேர் மலேரியா நோய்க்காக சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை இவ்வைத்தியசாலையில் அண்மையில் மலேரியா நோய் காரணமாக உருத்திரபுரவாசியான பகீரதன் (வயது 19) என்பவர் உயிரிழந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

## வதிரி-அல்வாய் பகுதிகளில் வீதிகள் சீரின்மையால் வாகன சாரதிகள் எரிச்சலுறும் நிலை

(வல்வெட்டித்துறை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளை விற்பனை நிலையங்களுக்கு பொருட்களை ஏற்றி இறக்கும் பணியின் போது வீதிகள் சீரின்மையால் வாகன சாரதிகள் எரிச்சல் கொள்கின்றனர் எனத்தெரிவிக்கப்படுகின்றது,

கூட்டுறவுச்சங்கத்தின்கிளை நிலையங்களான வதிரி வ_க்கு 25ம் இலக்ககிளைக்கான வதிரி-அல்வாய் தெற்கு வீதியும் நீண்டகாலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக உள்ளதால் தாம் தேவைக்கேற்ற வகையில் பொருட்களை ஏற்றி இறக்க முடியாதுள்ளதாக கிளை முகாமையாளர்களும் வாகன சாரதிகளும் கவலை தெரிவிக்கின்றனர். (எஸ்-16)

## இளைஞர்களின் முட்டையடி விளையாட்டு மதப்பூசலை ஏற்படுத்துமா?

(ஈச்சமோட்டை)

தற்போது இளைஞர் பலர் தமது பொழுது போக்காக 'முட்டையடி'யில் ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது மதிப்பு, மரியாதை அற்ற விதத்தில் பெரியவர்கள் மீதும் தெரியாதோர் மீதும் இம் 'முட்டையடி' பிரயோகிக்கப் பட்டுவருகின்றது.

இச் செயற்பாடு கிறிஸ்தவ இந்து சமய மக்களிடையேயான விரிசலை ஏற்படுத்தி வருவதை காணமுடிகின்றது.

நேற்று முன்தினம் மாலை 7.00 மணியளவில் ஈச்சமோட்டை பகுதியில் இந்து சமய வயோதிபர் ஒருவர் மீது இனந்தெரியாத இளைஞர் குழு ஒன்று ''முட்டையடி'' தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்று விட்டது ஆத்திரமடைந்த ஊர் மக்கள் அவர்களைத் துரத்திச் சென்ற போதும் அவர்கள் பாஷையூர் பகுதியினுள் சென்று மறைந்து விட்டனர்.

இப்பிரச்சனைபற்றி அப்பாதையில் வந்த கிறிஸ்தவ குரு ஒருவருடன் மக்கள் விவாதித்தனர்.

குரு இதுபற்றி தெரிவிக்கையில் இச்செயல் சமய சடங்கு அல்ல எனவும் இது எமது சமுதாயத்திற்கு ஏற்றதல்ல எனவும் இவ்வாறு செயல்படும் இளைஞர்கள்மீது ஊரார் சேர்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

இவ்விடயம் பாரியபிரச்சினைகளை உருவாக்குவது பற்றி இளைஞர் சமுதாயம் ஏன் சிந்திக்கத் தவறியது என மக்கள் பெரிதும் வேதனையடைந்துள்ளனர். (க-59)

## மஹோற்சவம்

கல்வளை இயற்றாலை பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் ஒன்பதாம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் பங்குனி பூரணை தினமான 19 ஆம் திகதி தேரும் 20 ஆம் திகதி தீர்த்தமும் நடைபெற்று மஹோற்சவம் நிறைவு பெறும். (க-39)

## விவசாயியின் கவனக்குறைவால் புகையிலை செய்கை நாசம்

(நீர்வேலி)

பறக்குவாட் என்ற களை கொல்லி மருந்தை தவறுதலாக புகையிலைச் செடிக்கு விசிறியதில்ஆயிரத்து நானூறு புகையிலைச் செடிகள் முற்றாகக் கருகி நாசமாகியது.

இச்சம்பவம் சிறுப்பிட்டி மேற்கில் கடந்த திங்கட்கிழமை நிகழ்ந்தது. கே. செல்வம் என்ற விவசாயியினதுபுகையிலைச் செடிகளே கருகி நாசமாகின.

வேறு ஒரு மருந்துப் போத்தலில் இம் மருந்தை ஊற்றி வைத்திருந்தமையே இத்தவறுக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (எஸ்-19)

## வீதியில் பாரியகிடங்கு

[மந்துவில்]

சாவகச்சேரி நகரில் தனங்களப்பு, கச்சாய்சாலை கலபிரதான வீதியுடன்சேரும் இடத்தில் பாரிய கிடங்கு ஒன்று காணப்படுகிறது.

இக்கிடங்கினால் துவிச்சக்கர வண்டி மோட்டார் சைக்கிள் போன்றன செல்லும்போதுமிகுந்த சிரமத்தை எதிர்நேக்க வேண்டி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மகளிருக்கு மனையியல் பயிற்சி

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூட்டுறவுச் சங்கம் மகளிருக்கான அடிப்படை மனையியல் பயிற்சி நெறி எதிர் வரும் சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவிருப்பதாக சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சங்கத்தில் அங்கத்துவ மகளிர்கள் பங்கு பற்றும் இப்பயிற்சி நெறியில் 40ற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் பங்குபற்ற உள்ளனர். (க-23)

## புதிய சப்பறம் அமைப்பு

வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு புதிய சப்பறம் ஒன்றை வடிவமைப்பதற்கென சப்பறத் திருவிழா உபயகாரர்களால் ஓர் சப்பறந் திருப்பணிச் சபை அமைக்கப்பட்டு ஆரம்ப கட்டவேலைகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 5 லட்சம் ரூபா செலவில் அமையவிருக்கும்இப்புதிய சப்பறத்திற்கு வெளிநாட்டு உள்நாட்டு சப்பறத் திருவிழா உபயகாரர்களிடம் இருந்து நிதி சேகரிக்கப்பட்டு வருகின்றது. (எஸ்)

## விபத்தில் காயம்

நீர்வேலியில் மாசுவன் சந்தியில் கடந்த 13 ஆம் திகதி மாலை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் ஒருவர் காயமடைந்தார். மோட்டார் சைக்கிள்களும் சேதத்துக்கு உள்ளாகின.

இச்சம்பவத்தில் சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த 41 வயதுடைய க. பாலசிங்கம் என்பவரே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (க-19)

## நடமாடும் செயலகம் 27இல் மிருசுவிலில் நிகழ ஏற்பாடு

[தென்மராட்சி]

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் முதலாவது நடமாடும் செயலகம் இம் மாதம் 27ம் திகதி மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் செயலகத்தில் எழுதுமட்டுவாள் தெற்கு எழுதுமட்டுவாள் வடக்கு, மிருசுவில் தெற்கு, மிருசுவில் வடக்கு ஆகிய நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்கள் தமது பிரச்சனைகளை நேரில் எடுத்துக்கூறி பரிகாரம்தேடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள். செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் பிரதேச செயலக அதிகாரிகள் உட்பட வேறு திணைக்களங்களின் உத்தியோகத்தர்களும் சமூகமளிப்பர் எனத் தெரிவிக்கப் பட்டது. [சி-77]

## கும்பாபிஷேகம்

(அரியாலை)

அளவெட்டி வடக்கு அருள்மிகு ஐயனார் கோவில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7மணிக்கு நடைபெறவுள்ளது. [சி]

## சைவசமயத்தின் நிலைக்களனாக விளங்குவன ஆலயங்களேயாகும்

பண்டிதர் தி பொன்னம்பலவாணர்

இன்று சைவசமயத்தின் மையமாக விளங்குவன ஆலயங்களேயாகும். சைவ சமயத்தை மக்களிடையே பிரசாரம் செய்து வலியுறுத்தும் மடாலயங்கள் ஆதினங்கள் நம் மத்தியில் இல்லையெனவே கூற வேண்டியிருக்கிறது.

ஒரு ஊரில் இரண்டிற்கு மேற்பட்ட ஆலயங்கள் உள்ளன என்றால் நாலு ஐந்து ஊருக்கு ஒன்று என்று சொல்லத் தக்கதாகக் கூட ஆதினங்கள் இல்லை. யோக சுவாமிகள் போன்ற ஞானியரும் நம்மத்தியில் இல்லை.

இப்படியான நிலையில் நம் மத்தியில் உள்ள ஆலயங்களே நம் சமய அறிவு—ஒழுக்கம் பெருவற்றுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டியன.

ஆனால் சைவ மக்களின் துரதிர்ஷ்டவசமாக நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது ஆலயங்களும் ஆலயங்களின் கட்டட வளர்ச்சி அங்கு நிகழும் திருவிழா பூஜை என்பவற்றின் வளர்ச்சியிலேயே அக்கறை உள்ளனவாகக் காணப்படுகின்றன.

ஆறுமுக நாவலர் காலத்திலும்அக்காலத்திற்கு முன்னும் பின்னும் கூட பெரும்பாலான ஆலயங்களில் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் திருவாதவூரர் புராணம் என்பன படனமாக நிகழ்ந்தன. அக்காலத்தில் இப்புராணங்களில் உள்ள ஒருசில பாடல்களாவது மனனம் செய்யாதவர் இருக்கவில்லை. ஒவ்வொரு ஊரிலும் புராணம்பாடி பயன் சொல்லவல்ல சிலராவது இருந்தனர்.

இன்று ஆலயங்களில்புராண படனம் நடைபெறாமையால் புராணம் படிப்பவர் பயன் சொல்பவர் அருமையாய் விட்டது. அக்காலத்தில் புராண படனத்தின் சிறப்பான பகுதிகள் நிகழும் காலங்களிலும் திருவிழா, கும்பாபிஷேகம் போன்ற சந்தர்ப்பங்களிலும் அன்னதானம் முதலியன நிகழ்ந்தன இவற்றுடன் பலரின் நோய் தீர்க்கும் ''விபூதியிட்டு பார்வை பார்த்தல்'' நிகழ்வுகளும் ஆலயங்களை மையமாகக் கொண்டு மக்களுக்கு சைவசமயம் பயனுள்ளதாக இருந்தது.

இப்படியான நிலை உண்டாக ஒவ்வொரு ஆலயமும் அறிவுபூர்வமாக காலத்துக்கு ஏற்ற விதத்தில் செயற்படாவிட்டால் சைவ சமுதாயம் சிறுமையடையும் நிலை அதிகரிக்கும்.

இன்னும் சில காலம் சென்றால் பல நிகழ்ச்சிகளைப் புதுப்பிக்கும் வாய்ப்பே இல்லாத நிலை வந்து விடும் சைவமக்களும் சைவ ஆலய நிர்வாகிகள் குருமாரும் இவ் விடயத்தில்சிரத்தை எடுக்காவிட்டால் வருங்கால் சமுதாயம் நம்மைக் குற்றம் சொல்லும் நிலை உருவாகும்.

# கம்யூனிஸ்ட் கொள்கையில் பற்றுடையவராக இறுதிவரை வாழ்ந்தவர் அமரர் சண்முகதாசன்

## 81வது நினைவு தினத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''சண்முகதாஸ் தலைசிறந்த மாக்சியவாதி, தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி, அவர் தமது இளமைக் காலத்தில் வரித்துக் கொண்ட கம்யூனிஸக் கொள்கையில் உறுதியான பற்றுடையவராக தமது கடைசி மூச்சுவரை வாழ்ந்தார்''

காலஞ்சென்ற நா. சண்முகதாஸின் 81 வது நினைவு தினத்தை ஒட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஜி. சி. எஸ். யு. வின் யாழ். கிளைத் தலைவரும் 11 தொழிற்சங்களின் கூட்டுக் கமிட்டியின் தலைவருமான இ. தவராசா கூறினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின்அதிபரானஎஸ். சண்முகநாதன் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் தமது கல்லூரியின் பழைய மாணவனான சண்முகதாசனின் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

மூத்த பத்திரிகையாளர், பாரதிநேசன் வீ. சின்னத்தம்பி அறிமுகவுரையில்; சண்முகதாசின் போராட்ட வாழ்க்கை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவதாக கூறினார். அரைநூற்றாண்டிற்கும் மேலான காலம் சண்முகதாசன் உழைப்பாளி மக்களின் உயர்வுக்காகப் பாடுபட்டார்.

சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டபோது சண்முகதாசன் நேர்மையான மாக்சியத்தின் பக்கத்தில் நின்று உலக மாக்சியவாதத் தலைவர்களின் வரிசையில் இடம் பெற்றார். சண்முகதாசனை இருபதாம் நூற்றாண்டின் இலங்கையின் தலைசிறந்த மனிதன் என்று கொள்ளலாம்'' என்றும்அவர் கூறினார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த சோ. சிவபாலன் தனது உரையில்; ·60 ஆம் ஆண்டுகளில் சண்முகதாசன் தமது சொற்பொழிவுகளின் மூலமும் பிரசுரங்களின் மூலமும் எமக்கு மாக்சிய அறிவைத் தந்தார். அவர் தலைமை தாங்கும் வீரஞ்செறிந்த தொழிலாளர் போராட்டங்களைக் கண்டு நாம் வியந்தோம்'' என்று கூறினார்.

'இனப் பிரச்சினை உட்பட எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு மார்க்கத்தைசண்முகதாசனும் மற்றும் கம்யூனிஸத் தலைவர்களும் முன்வைத்தார்கள் என்று கூறினார். இளைப்பாறிய அதிபர் க. திருநாவுக்கரசு அரவிந்தனின் நன்றி உரையும் இடம் பெற்றது. (க)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி
- குறள்

# வலம்புரி

## வழிகாட்டும் விழுமியங்கள்

மக்கள் செழுமையுடனும் மதிப்புடனும் வாழ்வதற்கு நடைமுறை ஒழுங்குகள், ஒழுக்கங்கள் தேவைப்படுகின்றன. இளைஞர்கள் சுதந்திரம் சுரண்டப் பட்டு - விலங்கிட்டவர்களாக வாழ்வது பெரிதும் வருந்தத் தக்கதே. இன்றைய இளைஞர்கள் நாளைய நாட்டின் முதுகெலும்புகள் என்பதை மறக்கக் கூடாது.

வளர்க்கும் பணி வளர்ந்தவர்க்கு உரியது. சீரிய ஆற்றுப்படுத்தல் இல்லாது வெறுமனே இளைஞர்களை நச்சரிக்கக் கூடாது. எங்களின் வாழ்வியற் சீர்மை அவர்களால் கவனிக்கப்பட்டு பேணப்பட வேண்டும். வெறுமனே அவர்களைச் சாடுவதால் எதுவும் நடக்கப்போவதில்லை.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது செந்நாப்போதார் செந்நெறி. மண்ணிற் பிறக்கையில் எல்லோரும் நல்லவர்களாகவே பிறக்கின்றனர். சமூகத் தோற்றப்பாடுகள் ஏற்றமுள்ளவர்களாகவும் ஆக்கும். அழிவுப்பாதைக்கும் இட்டுச் செல்லும்.

இளைஞர்களை சான்றோர்களாக்குவது வளர்ந்தோர்களாகிய எங்கள் கடன். எங்களது அசைவுகளை அவர்கள் அணு அணுவாக கிரகிக்கின்றனர் என்பதை மறக்க கூடாது. பிசிராந்தையர் ''சான்றோர் பலர்யான் வாழுமூர்'' எனப்பெருமை பேசிக் கொண்டதை ஈண்டுசிந்திக்கவேண்டும்.

மாணவர்களிடையே ஒழுக்க நெறி வளர வேண்டுமானால் வழிகாட்டிகளாகிய எங்களின் பங்கும் அங்கு தேவை.

அண்மையில் நடந்த நிகழ்வொன்று என் அகத்தில் நிழலாடுகிறது. உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் உயர்தேசிய டிப்ளோமா இரண்டாம் வருடமாணவர்களின் செயற்பாடே அது; பதினையாயிரம் ரூபா காசோலையொன்றை கண்டெடுத்து ஒப்படைத்த பெருமைக்குரிய நேர்மையையே சுட்ட விரும்புகிறேன்.

அந்த நேர்மையாளர்கள் தமக்கும்தமது பெற்றோர்க்கும் நிறுவன பணிப்பாளர் குழாத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர்.

- அன்புடன் ஆசிரியர்

# நாவலருக்குப்பின் தோன்றிய வியத்தகு மகான்

# இறைவனை தன்னுள் காண விழைந்த வித்தகர்

''ஏசுவார்கள்; எரிப்பர்கள்; உண்மையை எழுது. உண்மைகளால் எழுது. யோகர் சுவாமிகளின் தெய்வீக வாக்கு, இன்று யோகர் சுவாமிகளது 36வது குருபூசைதினம். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. (ஆ-ர்)

யோகர்சுவாமிகள் - இவரது பிள்ளைத்திருநாமம் சதாசிவம் என்னும், யோகநாதன் என்னும், தம்பியையா என்னும், இவ்வாறு தாம், தாம் அறிந்தவாறு பலரும் கூறுவார்கள். ஆனால் அவரது இளமைக்கால வரலாற்றினை எவரும் திட்டவட்டமாகக் கூறக் கூடிய நிலையில் இல்லை.

ஈழத்திரு நாட்டின் யாழ்ப்பாணம் என்னும் சிறப்புபெயரைத் தாங்கிக் கொண்டுள்ள நகரின் எல்லைக்குட்பட்டதான கொழும்புத்துறையினை நீண்ட காலம் வாழ்விடமாகக் கொண்டிருந்தார் யோகர்சுவாமிகள்.

சுவாமிகளின் தாய் தந்தையர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர்களாவார்கள் இதன் காரணமாக சுவாமிகளின் பிறந்த இடமும் மாவிட்டபுரமாக இருக்க வேண்டுமெனக்கருதவேண்டியுள்ளது. சுவாமிகள் 1872 ஆண்டு மே மாதம் 29ம் திகதி அம்பலவாணருக்கும் சின்னாச்சிப்பிள்ளை அம்மையாருக்கும் அருந்தவப்புதல்வனாக அவதரித்தார்.

கொழும்புத்துறையில் கத்தோலிக்க பாடசாலையில் ஆரம்பக்கல்வியை பயின்றார். அக்காலத்தில் கிறிஸ்தவப் பாடசாலைகளில் சேரும் சைவப்பிள்ளைகளுக்கு கிறிஸ்தவப் பெயர் சூட்டப்படுவது வழக்கம். இவ்வழக்கத்திற்கிணங்க யோகர்சுவாமிகளுக்கும் 'ஜோன்' என்னும் பெயர்சூட்டப்பட்டதுஆனால் சுவாமிகளின் பிள்ளைத்திருநாமம் எது என்பது எவரும் அறிந்திருக்கவில்லை.

பாடசாலையில் கல்வி கற்ற காலங்களில் மிகுந்த துடிப்பும், வீரமும் பொருந்தியசிறுவனாகவே இருந்தார். ஆரம்ப பாடசாலைப் படிப்பின் பின் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலமும் தமிழும் கற்றறிந்தவுடன் பள்ளிப் படிப்பை முடித்தார்.

### நாவலருக்குப்பின் தோன்றிய மகான்


ஆறுமுகநாவலருக்கு பின் இருபதாம் நூற்றண்டில் தோன்றிய வியக்கத்தக்க ஒருமுனிவராகயோகர்சுவாமிகள் திகழந்தார். சுவாமிகளது ஆத்ம விசாலத்தால் மக்களின் அறியாமையை, பொய்மையை, சுதந்திரமின்மையை, தமது பக்தர்களிடம் இருந்து போக்கினார்.

பொய்யானஅறிவுப் பசியை போக்கிய உத்தமன் தெய்வீக அறிவையும் தாகத்தையும் போக்கி இறைவனைத் தன்னுள்ளே காண வகை செய்த வல்லாளன்.

கல்லூரி வாழ்வைப் பூர்த்தி செய்த சுவாமிகள் நீர்ப்பாசன இலாகாவில் இணைந்து களஞ்சியப் பொறுப்பாளராக பணிபுரிந்தார் ஒரு சிறந்த நேர்மையாளனாக கடின உழைப்பாளியாக சமய வாதியுமாக எளிமையும் உடையவராக இருந்தமையால் மக்கள் அவர் மீது அன்புகொண்டனர். தியானத்தில் இருப்பதே அவரது ஓய்வு வினையாகப்பட்டது.

சமய சூத்திரங்களை சுலோகங்களை, தொன்மை வாய்ந்த வேதங்களைக் கற்பதில் ஆர்வமுடையவனாக இருந்தார். ஓர் அதீதபிரமச்சாரியாக இருந்து இறைவனைக்காணவும், உணரவும், அவர் உளளம் துடித்தது.

தனக்கு மேலான இறை குரு ஒருவனை தேடும் பணியில் தன்வாழ்நாளை அர்ப்பணித்தார்.



... லவ மரத்தடியில் நல்லூரில்தன் குருவைக்கண்டார். மிகப் பிரபல்யம் வாய்ந்த செல்லப்பா சுவாமிகள் அவரிடம் யோகர் சுவாமிகள் தன் உள, உடல், இதயம் அனைத்தையும் அர்ப்பணித்திருந்தார். யோகநாதன் வருங்காலத்தில் ஒரு ஞானியாவார் என்பது இதன் மூலம் ஓரளவுக்குப் புலனாயிற்று குரு செல்லப்பா சுவாமிகள் தனது சீடர்களுக்குப் பல வழிகளிலும் பயிற்சி அளித்தார்.

### பாதயாத்திரை

தேரடியில் ஞானத்தில் இருக்குமாறு யோகருக்குச் செல்லப்பாசுவாமிகள் பணித்தார். நாற்பது நாட்களில் ஆழ்ந்த ஞானத்தில் சமாதி நிலையில் இருந்தார் குருவின் சொற்களைக் கேட்டு அதன்படி இரந்து உண்ணத் தலைப்பட்டார் அடர்ந்த காடுகளூடாகப் பாதயாத்திரை மேற்கொண்டு கதிர்காமக்கந்தனிடம் சென்றார்.

குருவின் மறைவுக்குப்பின் கொழும்புத்துறையில் இலுப்பைமர நிழலைத்தன் இருப்பிடமாகக் கொண்டார். கடும் வெய்யில், குளிர். காற்று, மழை இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் இறைவனது வழியை நாடிநின்றார். பக்தர்களின் வேண்டுதலுக்கு இசைந்து சிறுகுடிலில் வாழத்தலைப் பட்டார். இந்நிலையில் யோகர்சுவாமிகளைத்தரிசிக்க வறியவர்கள், பணக்காரர்கள், இளைஞர்கள், முதியோர் மருத்துவர்கள், நோய்வாய்ப் பட்டோர், நீதிவான்கள், அமைச்சர்கள் என்பவரும் கூடித் தரிசனம்பெற்றனர்.

### பிணிதீர்க்கும் மருந்து

யோகசுவாமிகளின் புன்னகையானது அவரது சீடர்களுக்கும், பக்தர்கக்ளுக்கும் மருந்தாக இருந்தது. உலகியல் பிணைப்புகளிலிருந்தும் துன்பங்களில் இருந்தும் பக்தர்களை விடுவிக்கும் ஞான வல்லமை பெற்றார்.

சுவாமிகளது ஒவ்வொரு செயற்பாடும் இறைவனின் விருப்பமே என்பது தான் யோகர் சுவாமிகளின் பொன் வாக்காக இருந்தது. திருவாசகம், சிவபுராணம் என்பவற்றை பக்தர்களை ஓத வைத்தார். குருந்தமர நிழலில் வீற்றிருந்த சிவனை ஒத்திருந்தனர்.

### சமய தத்துவ வாதி

சாதி, சமய வேறுபாடுகளின்றி அனைத்து மக்களும் யோகர் சுவாமிகளிடம் வந்து குவிந்தனர். கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிகழ்வுகளை சொல்ல வல்லோனாகவும் எளியமொழி நடையில் சமய தத்துவங்களைக் கூறும் வல்லமையாளனாகவும் திகழ்ந்தார்.

### ஒருபொல்லாப்பும் இல்லை

எரிமலையைப் போல் கொதித்தும், குளிர்வார்த்தைகளை உதிர்த்தும் பக்தர்களிடையே காணப்பட்ட சுவாமிகள். அடிக்கடி ''ஒருபொல்லாப்பும் இல்லை'', ''யாம் ஒன்றும் அறியோம்'', ''எல்லாம் உண்மையே'' ''உலகு இறைவனின் விளையாட்டிடம்'' என்ற வார்த்தைகளைப் பிரயோகிப்பார்.

அ. செல்லத்துரை
(சிவதொண்டன் நிலையம்
செங்கலடி)

எளிமையான வாழ்க்கையை வாழ விரும்பிய சுவாமிகள் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சதா பயன்பெற வாழ்ந்த பெருமான். ஒரே இறைவன், ஒரே உலகு, என்பதே சுவாமிகளின் இதயதாகமாகும்: சீடர்களதும், பக்தர்களதும் நோய்களைக் களைந்ததோடு அவர்களது விருப்பங்களையும் பூர்த்தி செய்தார். இரு மொழித்திங்கள் இதழான ''சிவ தொண்டன்'' சுவாமிகளின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்டது. அவரது நற்சிந்தனை உளத் தூய்மைக்கு மருந்தாக அமைந்தது,

1964 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 24 ஆம் நாள் சுவாமிகள் சமாதி அடைந்த போதும் அவரது போதனைகள் இன்னும் என்றும்நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

## வீதி புனரமைப்பு

(அரியாலை)

யாழ். கண்டி வீதியிலிருந்து பிரிந்து அரியாலை நீர்நெச்சித் தாழ்வு விநாயகர் ஆலயத்திற்குச் செல்லும் வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

வீதியின் இருமருங்கிலும் கற்கள் குவிக்கப்பட்டு திருத்த வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன. (எஸ்)

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசஓய்வுதியர் சங்கவிசேட கலந்துரையாடல் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 30 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதி மொஸ்கியூ ஒழுங்கையில் உள்ளநகர மண்டபத்தில் இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சஞ்சலமில் வாழ்வுதனைத் தரணியிற்தா

முப்புரங்கள் நின்றெரிய முனிந்த தேவே!
மெய்யடியார்க் கருள்மொழியும் மூலக்கோவே!
சிற்பரனே பழிவினைகள் தீர்க்கும் தாதாய்!
செஞ்சுடரும் வெண்மழுவாள் கையி லேந்தி
விற்புருவ நுதல்வாலாம் பிகையி னோடு
வேண்டிடுவர் ருளத்தாசை விரும்பித் தீர்க்கச்
சப்பரத்தில் ஏறிவரும் வைத்தீஸ் வரனே
சஞ்சலமில் வாழ்வுதனைத் தரணி நீதா

கவிதாமணி



## தவக்கால சிந்தனை

10 ஆம் நாள்

நீ காணிக்கை செலுத்தி வரும் போது உன் சகோதரனுக்கு உன் மீது மனத்தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால் பீடத்தின் முன் உனது காணிக்கையை வைத்து விட்டு முதலில் அவனுடன் சமாதானம் செய்த பின் வந்து காணிக்கையை செலுத்து.

திருப்பலிப்பீடத்தில் காணிக்கை தினசரி வாழ்வில் வெறுமை வாழ்வு-வழிபாடு இவை இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்படமுடியாதவை, எமது கிறிஸ்தவ வாழ்வின் வழிபாடு வாழ்வாகவும் வாழ்வு வழிபாடாகவும் இரண்டறக் கலக்கும் இடமே ஆலயம். எனவே எமது வாழ்விலே ஆணி வேரும் அடித்தளமுமாய் இருக்க வேண்டிய இறை அன்பு எமது வாழ்வுக்கு உறுதி அளிக்க வேண்டுமாயின் இறை அன்பிலே மலர்கின்ற பிறரன்பு என் சகோதரன் அன்பு ஒப்புரவு, ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய புனித மலர்கள் எம்மில் மணம் வீச வேண்டும்.

உனக்காக என் உயிரையே தந்தேன். எனக்காக நீ என்ன செய்யப்போகிறாய்? என வினாவும் இயேசுவிற்கு நான் அளிக்கும் பதில் என்ன? உன் அயலானை உன் அண்டை வீட்டுக்காரனை மன்னிக்கத் தயாரா? அவனை அவனாக, அவளை அவளாக ஏற்றுக்கொள்ள அன்புசெய்ய ஒப்புரவாகி உறவு கொள்ள நீ தயாரா? அவனது தனிமையிலே அவனது தளர்ந்த வாழ்விலே தட்டிக்கொடுக்கத் தயாரா? அன்றி தாழ்வுற்ற உன் சகோதரனின் துன்பத்தில் இன்பம் காணத்தயாரா? சிந்திப்போம்.

இமாகுலன்
அச்சுவேலி

## 'அடுத்த முதல்வர் ஜெயலலிதா' நகைச்சுவை என்கிறார் கலைஞர்

(சென்னை)

'அடுத்த ஆண்டு அ.இ.அ.தி.மு.க. சார்பில் ஜெயலலிதா தான் முதலமைச்சராக வருவார் என்று அக்கட்சி உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் தமிழக சட்டசபையில் கூறிய போது முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி இந்த நகைச்சுவையை ரசிக்கிறேன் என்று கூறினார்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம நடைபெற்ற போது இச் சுவையான வாதம் இடம் பெற்றது.

திரு. சுந்தரம் சுமத்திய குற்றச்சாட்டு ஒன்றுக்குப் பதிலளித்த முதலமைச்சர் இந்திராகாந்தியை அன்னை இந்திராகாந்தி என்று தான் சொல்லியிருக்கிறேனே தவிர மரியாதைக் குறைவாக எப்போதுமே நான் சொன்னதில்லை அண்ணாவின் வழியில் வந்தவன் நான் என்று கூறினார். (சி)

### இல. இனப்பிரச்---

பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கே. வி. குகேந்திரன் (வி. கே. ஜெகன்) நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்த இலங்கைக்கான இந்திய பிரதித் தூதுவர் திரிபாதி ஐச் சந்தித்துக் கேட்டுக் கொண்டார்.

''ரான்'' அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பில் கே.வி. குகேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சிவநாசன், நல்லூர்பிரதேசசபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் உட்பட அக்கட்சியின்பிரதேச சபைத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நடைபெற்ற இச் சந்திப்பில் பின்வரும் கோரிக்கைகள் ஈ.பி.டி.பி.யின் குழுவினரால் முன்வைக்கப்பட்டது.

மருத்துவம், தொழில்நுட்பம் கலை காலாச்சாரம், இலக்கியம் சார்ந்த நூல்களை இந்தியா தந்துதவ வேண்டும்

மந்த போசாக்கினால்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பள்ளி முன்னிலைப்பிள்ளைகளின் போசக்கினை மேம்படுத்த சத்துணவு நிலையங்களை அமைக்க உதவவேண்டும்.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் கல்வி கற்கும் மாணவர்கள் துடுப்பாட்டத்தில் பயிற்சி பெறுவதற்கான ஆடுகளங்களை அமைத்துத் தர உதவ வேண்டும் அல்லது சிறந்த கிரிக்கெட்விரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்க வசதி செய்து தரவேண்டும்

போன்ற பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்படடது· [ந]

### அரசு-ஐ---

ஆகியோரும் ஐ.தே.க.சார்பாக அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கருஜெயசூரிய காமினி அத்துக்கோறளை, றொனி டிமெல், கே. என். சொக்ஸி ஆகியோரும் இப் பேச்சில் கலந்து கொண்டனர்

1997ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட நகல் அரசியல் யாப்பு திட்டத்தின் அம்சங்கள் தொடர்பாக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் பிரஜா உரிமை, அதிகாரப் பகிர்வு, பிராந்தியங்கள் தொடர்பாகவும் நீதித்துறை அடிப்படை உரிமைகள் பற்றியும் ஆளுநர் நியமனம் தொடர்பாகவும் ஆராயப் பட்டது.

மேற்படி விடயங்கள் கள் குறித்து ஆராய்ந்து எதிர் வரும் 21ஆம் திகதி நடைபெறும் அடுத்த கலந்துரையாடலில் அறிக்கை சமர்ப்பிக்க அரச மற்றும் ஐ.தே. கட்சி உறுப்பினர் கொண்ட குழுஒன்று அமைக்கப்பட்டது

இக்குழுவில் அமைச்சர் பீரிஸ் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர் சொக்ஸிஆகியோர்அடங்குவ

பத்திரிகைக்களித்த பேட்டியொன்றில் ஜனாதிபதி புலிகளுக்கு ஐ. தே. கட்சி ஆதரவாக உள்ளது எனத் தெரிவித்த குற்றச்சாட்டு பற்றி கேள்வி எழுப்பிய ஐ· தே. க. உறுப்பினர்கள் அவ்வாறு தொடர்பேதும் இல்லை என்றும் கூறின.

இது தொடர்பாக நாம் தேவையேற்படும் பட்சத்தில் மேலும் விபரிப்பதாகக் கூறி தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி விளக்கினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம் சின்னத்தம்பி

[கொல்லங்கலட்டி]

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திருமதி சுந்தரம் சின்னத்தம்பி காலமானார். அன்னார் காலஞ்சென்ற சாமி சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், நகுலேஸ்வரி, சிவமகாராசா [தலைவர், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்], கைலைமகான் [ஆசிரிய ஆலோசகர்], அன்னபரிபூரணம் [பெற்றி ரீச்சர் ஆசிரிய ஆலோசகர்], ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற பெரியதம்பி, மலைமகள் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) ஞானேஸ்வரன், [இளைப்பாறிய இ. போ, ச உத்தியோகத்தர்] ஆகியோரின்அன்பு மாமியாரும், லம்போதரன், சர்வதயாபரன், அபர்ணா (மாணவி, மகாஜனாக் கல்லூரி] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

ஈமச்சடங்குகள் இன்று [17-03-2000] வெள்ளிக்கிழமை மல்லாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு பி. பகல் 2மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. சிவமகாராசா

சி. கைலைமகான்

[மக்கள்]

கோணப்புலம்

மல்லாகம்.

இ. 131


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலசாத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்று சென்றல்-சென்ஜோன்ஸ் 94வது கிரிக்கெட் போட்டி ஆரம்பம்

[யாழ்ப்பரணம்]

- விளையாட்டு நிருபர் -

யாழ்- மாவட்ட கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரும் ஆவலையும், பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கும் வடக்கின் பெரும் மோதல் என வர்ணிக்கப்படும் சென்றல் - சென் ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.30மணிக்கு கோலாகலமாக ஆரம்பமாகி நாளை வரை நடைபெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரிஅணியை அணிசெய்யும் கிரிக்கெட் வீரர்களின் பெயர் வருமாறு பி. கஜீதரன் [கப்டன்], கே. பிரகாஷ் [ உதவிக்கப்டன் ], ரி. தினேஷ், எஸ்.பிருந்தாவன், எஸ். றாஜீவ், எஸ். கார்த்தீபன், வி.றஜீவ்குமார் வி.அகிலறாஜ், பி. சால்ஸ் பிறொனிசன், கே. மோகன், எஸ். நவநீதன், ஏ. லக்ஸ்மன், என்.சசிகரன், ஆர். மிதுஷன், எஸ். கிருஷ்ணா, யே. றெனன், ஏ. டுறன்.

பரியோவான் கல்லூரி அணியை அணிசெய்யும் கிரிக்கெட் வீரர்களின் பெயர் வருமாறு ஏ. தினேஷ் எபனேசர் [கப்டன்], ரி. றஜீவ் [உதவிக்கப்டன்], பி.தோமஸ் தேவநேயன், பி.எஸ்.டிலான் தேவதாசன், ரி. றாகுலன், ஆர். றட்ணம், வி.விஷ்ணுவர்த்தன், பி. பிரதீபன், பி. லவேண்ட்ரா, சி.அகிலன் எஸ். றாஜாராம், ஏ, ஜீவதர்சன், பி.பிறியந்தா, ஆர். சன்ஜித், ஆர். பிரகதீசன்.

இம்முறை கிரிக்கெட்போட்டியை கண்டுகளிப்பதற்கு பெருந்திரளான ரசிகர்கள வருவார்களென எதிர்பார்க்கப்படுவதால் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ்நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் கடந்த காலங்களில் இப்போட்டிகளை கண்டுகளிப்பதற்கு கட்டணங்கள் அறவிடப்படாத போதும் இம்முறை 25/- உம்,10/-உம் அறவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. [வ]

### நள்ளிரவு---

டைத்து உட்புகுந்த திருடர்கள், வீட்டு மின்னிணைப்பு பிரதான ஆழியை நிறுத்திவிட்டு, அலுமாரியில் இருந்த மணிபேர்சிலிருந்து ▮ நகை மற்றும் மனைவியின் விரலில் இருந்த மோதிரம் உட்பட 25பவுண் நகைகளையும், 28500 ரூபா ரொக்கப்பணத்தினையும் திருடிச் சென்றுள்ளனர்.

மேலும் மனைவியின் மோதிரத்தை கழற்றிவிட்டு, பிள்ளையின் மோதிரத்தினைக் கழற்ற முற்பட்ட போது பிள்ளை சத்தமிடவே வீட்டார் எழுந்தவுடன் திருடர்கள் ஓடிமறைந்தனர்.

மேலும் அயலில் உள்ள செல்லமுத்து என்பவரது வீட்டினுள் புகுந்த திருடர்கள் அவரைத் தள்ளி வீழ்த்தி கழுத்திலிருந்த $2\frac{1}{2}$ பவுண் தங்கச் சங்கிலியைத் திருடிச் சென்றுள்ளனர்.

மேலும் இப்பகுதிகளில் பல வீடுகளில் திருட முயற்சித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ச – 21)

### புலிகள்---

வார் எனவும் காயமடைந்த பொலிஸாரில் இருவர் சி, ஐ. டி. பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது,

காயமடைந்த பொலிஸாரில் 9 பேர் பொலநறுவை வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் காயமடைந்த பொலிஸாரில் ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது மட்டக்களப்பு 233 ஆவதுபிரிகேட் தளத்திலிருந்து 10 வாகனங்களில்விடுமுறையில் வீடுசெல்லும் இராணுவத்தினரும் பொலிஸாரும் வெலிகந்த நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மட்டக்களப்பு நகரிலிருந்து இரண்டரைக் கிலோ மீற்றர் தூரத்தில் பிள்ளையாரடிக்கும்' சத்துருக் கொண்டானுக்கும் இடையே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது,

கடந்த ஆறுமாத காலத்திற்குள் மட்டக்களப்பு - திருமலை வீதியில் நடந்த தாக்குத்ல்களில் 27 படையினர் கொல்லப்பட்டமையை அடுத்து திருமலை வீதியை விடுத்து சின்னப்பாலம் வழியையே பயன்படுத்தி வந்தனர்.

வாகனத் தொடரணி புறப்படுவதற்கு 2 மணிநேரத்திற்கு முன் மட்டக் களப்பிலிருந்து வாழைச்சேனை வரையா 30 கிலோ மீற்றர் தூர வீதியில் மக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதுச,

இந்த கிளைமோரத்தாக்குதலானது வோக்கிடோக்கி மூலம் புதியதொரு பாணியில் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (60-101)

### நேற்று---

னைப் படையினர் கைதுசெய்தனர்.

இதனையடுத்து தென்மராட்சிப் பாடசாலை மாணவரிடையே வேகமாக இச் செய்தி பரவியதை அடுத்து காலை 10 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம் உட்பட தென்மராட்சியின் பல பாடசாலைகளின் மாணவர்கள் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

இதனையடுத்து மாணவன் துஸ்யந்தனை நேற்று மாலை படையினர் விடுதலை செய்தனர்.

குறிப்பிட்ட மாணவனை விடுதலைசெய்யாவிடில் தமது பகிஷ்கரிப்பை விரிவுபடுத்தப் போவதாக மாணவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது· (ச-21)

### யாழ்.---

இது பற்றிஅவர் மேலும் தெரிவிக்கையில்: மாநகர சபை ஊழியர்கள் 14 பேர் காணாமல்போயுள்ளதாகவும் அவர்களில் எட்டுப் பேருக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதாகவும் மீதமாக உள்ள அறுவரில் மூவருக்கு இந்த மாதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும், ஏனைய மூவரில் ஒருவரின் உறவினர் இன்னும் அத்தாட்சிப் படுத்தும் ஆவணங்களை தம்மிடம் ஒப்படைக்கவில்லை என்றும் ஏனைய இருவர் இது விடயமாக தம்முடன் தொடர்பு கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே விண்ணப்பங்கள்சமர்ப்பித்து உள்ளூராட்சி ஆணையாளர் அங்கீகரிக்காதவர்களுக்கு இம்மாதத்திலிருந்து சம்பளம் கொடுக்கும் படியான தீர்மானத்தை பிரதி மேயர் மேற்கொண்டுள்ளதாகவும் அதே சமயம் இவர்களுக்கான நிலுவையைத் தான் உள்ளூராட்சி ஆணையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அங்கீகாரம் பெற்ற பின்னர் நிலுவைத் தொகைகளை வழங்கலாம் எனவும் பிரதி மேயர் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

இதே வேளை காணாமல் போன மாநகர சபை ஊழியர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படாவிட்டால் மாநகர சபை முன் மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக வட்டுக்கோட்டையில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (03)

## இருவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

உடுவில் தெற்கு மானிப்பாயைச்சேர்ந்த இராஜேந்திரன் பாஸ்கரன் [வயது 38), தம்பிராசா தங்கமலர் [வயது 36) ஆகிய இருவரும் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். ஆஸ்பத்திரிக்கு வரும் போது காணாமல் போய்விட்டதாக அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-3)

## நால்வரும் விடுதலை

[வவுனியா]

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்ட நால்வரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களை விடுதலை செய்த படையினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாகவும் விசாரணையின் பின் விடுதலை செய்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

### ஜே. வி. பி.--

ஊர்வலத்தின் போது முன்வைக்கப்பட்ட கோஷங்கள் வருமாறு;

★ நாட்டைத் துண்டாடாதே

★ மறைமுகப் பேச்சு வேண்டாம்,

★ ரணில்-சந்திரிகா பேச்சு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். (வ)

### புறக்கோட்டை---

இருந்து மாலை 1.30 மணி வரை நீடித்தது.

புறக்கோட்டை ஜா எலப் பகுதிகள்நேற்றுடன்3 தடவைகள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன. இதன் போது சுமார் 200க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ச)

### கிளி.-முல்லைத்

துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் சம்பந்தமாகவும் எடுத்துக்கூறவே இச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இச் சந்திப்புக்காக இவர்கள் தற்போது வவுனியா சென்றுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-103)


ஸ்ரீ செல்வா

யாழ். ஸ்ரான்லி வீதி,

காலை 10-30 பி.ப 2.30

அஜீத்குமார் ஜோதிகா

நடித்த

''முகவரி''

வெட்டுப்படாத

நேரடி CD

(புதிய வெளியீடு)

(30115)